

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி கீரனூர் பேரூராட்சியைச் சேர்ந்த முன்னாள் அ.தி.மு.க. பேரூர் செயலாளரும், கீரனூர் முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவருமான இனாயத்துல்லா, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோர் முன்னிலையில் அ.தி.மு க.வில் இருந்து விலகி தன்னை திமுகவில் இணைத்துக் கொண்டார். இந்நிகழ்வில் கீரனூர் பேரூர் செயலாளர் அன்பு (எ)காதர்பாட்ஷா, ஒன்றிய செயலாளர்கள் பொன்ராஜ், சுப்பிரமணி, கீரனூர் பேரூராட்சி தலைவர் கருப்புசாமி, துணைத்தலைவர் ஹாஜி அப்துல்சுக்கூர் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஈ.ராஜா அறிமுக கூட்டம் சிவகிரி மறவர் சமுதாய மண்டபத்தில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணிஸ்ரீ குமார்,தொகுதி பார்வையாளர் டாக்டர் செண்பக விநாயகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பங்கேற்று வெற்றி வேட்பாளர் ஈ.ராஜாவுக்கு ஆதரவு கோரியும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியும் உரையாற்றினார்.உடன் கழக வெற்றி வேட்பாளர் ஈ.ராஜா,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,சீனிவாசன்,பரமகுரு, மாவட்ட அவை தலைவர் சுப்பையா ஒன்றிய செயலாளர் பொன் முத்தையா பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் மேலும் தொடர்ந்திட

# தி.மு.க. அணியின் வெற்றிக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி பணியாற்றும்!

## விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் அறிக்கை!



சென்னை, ஏப்.4

தமிழ்நாடு விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கடந்த ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்கள், அதன் மூலம் அடைந்திருக்கிற இரட்டை இலக்கு பொருளாதார வளர்ச்சி போன்றவை தொடர்ந்து, தமிழ்நாட்டை மேலும் அடுத்த நிலைக்கு கொண்டு சென்றிட திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைவது அத்தியாவசியத் தேவையாகிறது.

எனவே விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சிக்கு தொகுதி ஒதுக்கீடு செய்யவில்லை என்கிற மன வருத்தத்தை ஒதுக்கிவிட்டு, மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்திட தமிழ்நாடு முழுவதும் திமுக தலைமையிலான அணி வெற்றி பெற்றிட விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியினர் களப்பணி ஆற்றிட வேண்டும்.

கலைஞர் மகளிர் உரிமை திட்டம், கட்டணமில்லா விடியல் பயணம், காலை உணவு திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், கலைஞர் கனவு இல்லம், வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை, கட்டுமானத் தொழிலாளர் உள்ளிட்ட அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான புதிய திட்டங்கள் போன்ற இந்திய நாடே பின்பற்றக்கூடிய சிறப்பானத் திட்டங்களை அறிவித்து அதனை கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியால் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனால் தமிழ்நாட்டின் பல தரப்பு மக்களும் பயன்பெற்று வருகின்றனர். கல்வி, மருத்துவம் போன்றவற்றில் தலை சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. பெண் தொழிலாளர்கள் அதிகம் பணிபுரியும் மாநிலமாக உயர்ந்துள்ளது. கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் உள்ளிட்ட பல்வேறு வாரியங்களில் பல்வேறு புதியதுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டும் நலத்திட்ட உதவிகள் உயர்த்தப்பப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதனால் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் சுமார் 38 லட்சம் தொழிலாளர்கள் நல வாரியங்களில் புதிதாக பதிவுப் பெற்று சாதனை படைக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சாதனைகளால் தமிழ்நாடு 11.19 சதம் என்ற இரட்டை இலக்கை அடைந்து இந்தியாவின் உயரிய பொருளாதார வளர்ச்சி அடைந்த மாநிலமாக நிமிர்ந்து நிற்கிறது.

இந்த சட்டப்பேரவைத் தேர்தலில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சிக்கு தொகுதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தது. ஆனால் அதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அந்த வருத்தம் அடிமட்ட தொண்டர் வரையில் இருப்பது இயல்பே. இருந்தாலும் நாட்டின் நலன் மற்றும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, அந்த வருத்தத்தை ஒதுக்கி வைத்து விட்டு, திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைந்து, முதலமைச்ச ராக தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று, மேற்படி பணிகள் தொடர்ந்திட அனைத்து நிர்வாகிகளும் களப்பணி ஆற்றிட வேண்டும்.

குறிப்பாக நல வாரியத்தின் மூலம் பயன்பெற்ற லட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் இல்லங்கள் தோறும் சென்று, திண்னைப் பிரச்சாரம் மேற்கொண்டு, வாக்குகளை இந்த அணிக்கு கொண்டு வந்து சேர்த்திட வேண்டும். நான் தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. அணியின் வெற்றிக்கு வாக்கு சேகரிக்க உள்ளேன்.

இவ்வாறு பொன்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் – 2026 தி.மு.க. தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

### விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 8.4.2026 | திருவள்ளூர் மத்திய | பூவிருந்தவல்லி |
| 9.4.2026 | சென்னை கிழக்கு | துறைமுகம் |
| 10.4.2026 | சென்னை மேற்கு | அண்ணா நகர் |
| 11.4.2026 | சென்னை தென்மேற்கு | மயிலாப்பூர் |
| 12.4.2026 | காஞ்சிபுரம் வடக்கு | செங்கல்பட்டு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி கிழக்கு ஒன்றியம் பாலப்பட்டு, மாவட்டம்பாடியில்செஞ்சி தொகுதி தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி,புதூரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் வேட்பாளர் G.V.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், மும்மூர்த்தி, ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

### துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 10-4-2026 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி |
| 13-4-2026 | தென்காசி தெற்கு | தென்காசி |
| 13-4-2026 | சிவகங்கை | திருப்பத்துர் |
| 12-4-2026 | விருதுநகர் வடக்கு | திருச்சுழி |
| 15-4-2026 | விருதுநகர் தெற்கு | அருப்புக்கோட்டை |
| 16-4-2026 | மதுரை தெற்கு | திருமங்கலம் |
| 17-4-2026 | தேனி தெற்கு | ஆண்டிப்பட்டி |
| 18-4-2026 | தேனி வடக்கு | போடிநாயக்கனூர் |
| 19-4-2026 | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 02.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

### கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 10-4-2026 | சிவகங்கை | மானாமதுரை |
| 12-4-2026 | திருச்சிராப்பள்ளி மத்திய | லால்குடி |
| 14-4-2026 | சேலம் மேற்கு | சங்ககிரி |
| 16-4-2026 | சென்னை தெற்கு | விருகம்பாக்கம் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 02.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

### இலக்கிய அணித்தலைவர் அ.அன்வர்ராஜா தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 07-04-2026 | சென்னை வடக்கு | இராயபுரம் |
| 09-04-2026 | இராணிப்பேட்டை | ராணிப்பேட்டை |
| 10–4–2026 | இராணிப்பேட்டை | ஆற்காடு |
| 11–04–2026 | திருவண்ணாமலை தெற்கு | கலசப்பாக்கம் |
| 12–04–2026 | திருவண்ணாமலை வடக்கு | ஆரணி |
| 14-04-2026 | நாமக்கல் கிழக்கு | நாமக்கல் |
| 15-04-2026 | கரூர் | கரூர் |
| 18-04-2026 | திருவாரூர் | நன்னிலம் |
| 19-04-2026 | தஞ்சாவூர் மத்திய | ஒரத்தநாடு |
| 20-04-2026 | ராமநாதபுரம் | ராமநாதபுரம் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 600 018.
நாள்: 02.04.2026.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### (மூன்றாவது பட்டியல்)

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| தூத்துக்குடி, கோவில்பட்டி | – பொன்.முத்துராமலிங்கம் |
| திருக்கோயிலூர் | – சிவ.ஜெயராஜ் |
| ஜெயங்கொண்டம் | – கன்னிகை ஸ்டாலின் |
| பட்டுக்கோட்டை | – என்.வி.காமராஜ் |
| பேராவூரணி | – ஏனாதி பாலு |
| பாபநாசம் | – ரங்கசாமி, சாகுல்அமீது |
| பவானி | – கோ.வெ.குமணன் |
| திரு வி.க.நகர் | – பிரியா ராஜன் |
| செஞ்சி | – டி.ஏ.மணிவண்ணன் |
| மன்னார்குடி | – வழக்கறிஞர் கண்ணதாசன் |
| இராயபுரம் | – காசிமுத்துமாணிக்கம் |
| சேலம் தெற்கு | – சரவணன் (நெசவாளர் அணி) |
| கடையநல்லூர் | – மாலைராஜா |


குறிப்பு:ஏற்கனவேதொகுதிபார்வையாளர்களாகநியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சாத்தான்குளம் அ. மகாராசன்
### ஏப்ரல் 4 (2012)



திராவிடர் கழகத்திலிருந்து விலகி, கழகம் துவங்கியதும், அதில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

1957 முதல் திருச்செந்தூர் வட்ட துணைச் செயலாளராகவும், சாத்தான்குளம் பேரூர்ச் செயலாளராகவும், தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேலாக சாத்தான்குளம் ஒன்றியச் செயலாளராகவும், மேலும் தூத்துக்குடி மாவட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.